# சத்திய வேத பாதுகாவலன்

கத்தோலிக்க வார வெளியீடு

(செய்தித் தாளாகப் பதிவு பெற்றது)


சேனைப் பொன்விழாப் பொருட்காட்சி

நிகழிடம்: யாழ். புனித சம்பத்திரிசியார் கல்லூரி
நாள்: ஐப்பசி 17—18 ஆம் தேதிகள்

மரியாயின்சேனை
பொன் விழாவை யொட்டிய
சிறப்பு அனுபந்தத்தை உள்ளே காண்கவும்.


96-ம் புத். | 1971-ம் ஆண்டு ஐப்பசி மாதம் 16-ந் திகதி சனிக்கிழமை — பிரதிசதம் 15 | 38-ம் இல


# உலக ஆயர் "சினொட்"டில் முதல்வாரம்

சென்ற மாதம் 30ஆம் திகதி தொடக்கமாக ரோமாபுரியில் நடைபெற்றுவரும் உலக ஆயர் "சினொட்"இன் முதல் வாரத்தில் யாவரும் எதிர்பார்த்திருந்தது போல் நிகழ்ச்சிநிரலில் முதலிடம் அளிக்கப்பட்ட குருத்துவ விரதத்துவத்தைப் பற்றிய மதகோட்பாடுகள் அலசி ஆராயப்பட்டன. பரிசுத்த தந்தை 6ஆவது சின்னப்ப பாப்பரசர் பல மேற்றிராணிமாருடன் சேர்ந்து ஒப்புக்கொடுத்த கூட்டுத் திருப்பலியுடன் சினொட் ஆரம்பமாயிற்று. திருப்பலி ஒப்புக்கொடுத்த மேற்றிராணிமாரில் அன்று யாவருடைய கவனத்தையும் ஈர்த்துக்கொண்டவர் ஹங்கேரிதேச கருதினாலடிகளாகிய மின்சென்றி அடிகளாரே. இவர் 15 வருடங்களாக புடாபெஸ்ற் நகரில் அமெரிக்க தூதராலயத்தில் ஏகாந்த சிவியம் நடத்தியபின் சென்ற இரு வாரங்களுக்குமுன் ரோமாபுரி அடைந்திருப்பது நேயர்கள் அறிந்த விஷயமே. பரிசுத்த தந்தை நிகழ்த்திய பிரசங்கத்தில் மின்சென்றி அடிகளாரைப்பற்றிக் குறிப்பிட்டபோது அங்கு வீற்றிருந்த மேற்றிராணிமாரும் பிறரும் அகமகிழ்ச்சியினால் பூரித்துப் பலத்த கரகோஷம் செய்தனர். மேலும் அப் பிரசங்கத்தில் சின்னப்ப பாப்பரசர் ஓர் எச்சரிக்கை விடுத்திருந்தார். அது எதுவெனில் பகிரங்க பிரசார சாதனங்களால் சபையில் நடைபெறும் ஆலோசனைகளுக்கு இடையூறுகள் ஏற்படாது இருப்பதில் யாவரும் விழிப்பாயிருப்பதன் அவசியத்தைப்பற்றியே. ஆலோசனைகள் ஏற்கனவே தயாரிக்கப்பட்டிருந்த அறிக்கையைக் கருதினால் ஹொப்னர் அடிகளார் சமர்ப்பித்தலுடன் ஆரம்பமாயிற்று. சென்ற பல தினங்களாக பல மேற்றிராணிமார்களும் குருத்துவ விரதத்துவத்தைப்பற்றிய மதகோட்பாடுகளின் பல அம்சங்களைப்பற்றி எடுத்துக்கூறினர். ஏற்கனவே உரை நிகழ்த்திய ஆயர்மாரில் கருதினால் கூறே அடிகளாரும் ஒருவர். கீழைத்தேய முறைச் சடங்குகளை அனுசரிக்கும் கத்தோலிக்க மேற்றிராணிமார்களும் பலர் பேசியிருக்கின்றனர். ஆலோசனைக்கு அழைக்கப்பட்டிருக்கும் சந்நியாசசபைத் தலைவர்களில் ஒருவராகிய யேசுசபைத் தலைவர் அருப்பே அடிகளாரும் தமது யோசனைகளைக் கூறியுள்ளார். இதுவரையும் உரை நிகழ்த்தியவர்கள் குருமாரின் விரதத்துவத்தைப்பற்றித் தெளிவான, வரைவறைவான முடிவை இந்த சினொட் கூட்டத்திலிருந்து எதிர்பார்க்கின்றனர்.

# மரியாயின் சேனைக்கு மலர்மாலை சூட்டுவதா? மறுமலர்ச்சி வேண்டுவதா?

*மலர்மாலை சூட்டவும் வேண்டும்.*
*மறுமலர்ச்சி வேண்டவும் வேண்டும்.*

இது யாழ்மறை மாவட்டத்தைச்சேர்ந்த சகல சேனையாளரின் ஆர்வமும், ஆசையும் மாத்திரமுமல்ல, ஏன்? இம்மாவட்டத்தின் முழுத் திருச்சபையின் ஏக்கமும் நோக்கமுமாய் இருக்கின்றதென்றால் மிகையாகாது.

எங்களுடைய மேற்றிராசனத்தின் இல்லற அப்போஸ்தல சரித்திரத்தில், மரியாயின் சேனை தனிப்பெருமிடத்தைச் சுதந்தரித்துவிட்டதென்பதில் சந்தேகமில்லை. முப்பத்துமூன்று ஆண்டுகளுக்கு முன்பு வண. J. A. இராசநாயகம் சுவாமியாரால் பாண்டியன்தாழ்வில், வித்திடப்பட்ட சேனை இன்றைக்கு எங்கள் மேற்றிராசனத்தின் எல்லாப் பகுதிகளுக்கும் பரவிப் படர்ந்திருக்கின்றது. இறையருளால் தூண்டப்பட்டு மரியன்னையால் வழிநடத்தப்பட்டு, இவ்விருத்திக்காக உழைத்தவருக்காகவும், அவர்கள்வழியாக எம்மத்தியில் நடந்த அப்போஸ்தொலிக்க ஊழியத்திற்காகவும் நாம் இறைவனுக்கு நன்றிகூறும் விழாவே இப்பொன் விழா.

பொன்விழாவிலே பழையதைப் பார்ப்பதும் புதியதை நோக்குவதும் தகுதியும் நீதியுமாகும். சென்றகாலத்திலே நாம் நடந்த பாதையையும், புரிந்த சேவையையும், விரிந்த விதத்தையும் நோக்கும்பொழுது இறைவன் மரியாயின் வழியாக எம்மைத் தமது கருவிகளாக்கியதற்குப் பெருமையுடன் நன்றி கூறுகின்றோம்: "ஏனெனில், வல்லமை மிக்கவர் பெருமையுள்ளவர்களை என்னிடத்தில் செய்தருளினர். அவருடைய நாமமோ பரிசுத்தமுள்ளது."

பழையதைப் பார்ப்பதும் அதற்காகப் பாமாலையோ பூமாலையோ சூட்டுவதும் பொன்விழாவின் முதற்பகுதி. ஆனால், முக்கியத்துவம் நிறைந்தபகுதி இரண்டாம்பகுதி. புதியதை—வரவிருப்பதை. நோக்கி அதற்குத் தகுந்த முறையில் எம்மைத் தயார் செய்வது, பொன்விழாவின் முக்கியநோக்கமாகும். 1921-ம் ஆண்டு சேனை ஆரம்பிக்கப்பட்டது. இன்றைக்கு 1971-ம் ஆண்டு; இந்த ஐம்பது வருடங்களில் திருச்சபையும் உலகமும் எத்தனையோ மாற்றங்களில் ஈடுபட்டிருக்கின்றன; இன்றைய உலகிலே திருச்சபை எவ்வாறிருக்கிறதென்பதையும், திருச்சபையின் பணியிலே பொதுநிலையினர் கொண்டிருக்கும் பொறுப்பான பங்கையும், இரண்டாம் வத்திக்கான்சங்கம் விளக்கித் தந்திருக்கின்றது. இந்த ஒளியிலே சேனை எவ்வாறாக அதன் மனப்பான்மையிலேயும், வேலையிலேயும் மறுமலர்ச்சியை வேண்டவேண்டுமென்பது தெளிவாகின்றது.

இந்த மறுமலர்ச்சியைச் சிலர் விளங்காது சேனையின் அமைப்பை, அதன் உருவத்தை, அதன் தன்மையைத் தகர்த்து மாற்றவேண்டுமென்கின்றனர். இது தவறு. சேனையைச் சேனையாக்கும் ஆணித்தரத் தன்மைகளைத் தகர்த்தெறிவதோ, கண்டனம் செய்வதோ, குளிக்கும் நீருடன் குழந்தையை வீசியது போலாகும். இன்று சேனையில் வேண்டியது மாற்றமல்ல, மறுமலர்ச்சியேதான். இந்த மறுமலர்ச்சியின் தேவையைச் சேனையாளர் ஏற்று எய்தமுயற்சிப்பார்களென்பது எனது நம்பிக்கையும் செபமும்.

**இறைவனில் அன்பு வேண்டும்.**
**மரியாயில் பத்தி வேண்டும்.**
**விசுவாசத்தில் வீரம் வேண்டும்.**
**மனப்பான்மையில் விரிவு வேண்டும்,**
**ஆன்மாக்களில் ஆர்வம் வேண்டும்.**
**அனைத்திற்கும் அருள் வேண்டும்.**

எஸ். யே. இம்மனுவேல்,
ஆன்ம இயக்குனர்.

7-10-71,
மானிப்பாய்.

# ஜெனறல் பிருங்கோவின் ஜெய முழக்கம்

ஸ்பானிய அரசாங்கத் தலைவரான ஜெனறல் பிரான்ஸெஸ்கோ பிருங்கோ அவர்கள் அந்நாட்டிலே அதிகார பதவிக்குவந்த 35-ம் ஆண்டு நிறைவுவிழா அன்று வியாழக்கிழமை வந்தபோது சிறைவாசஞ்செய்த 3,086 கைதிகளுக்கு விடுதலை அளித்து, மற்றும் பல ஆயிரக்கணக்கான கைதிகளின் சிறைத் தண்டனைக் காலத்தைக் குறைத்துவிடலாயினர்.

அன்று தினம் அவர் மதிரித் தலைநகரிலுள்ள அரசமாளிகையின் முன்மண்டப மேல்மாடியில் அடியெடுத்து வைப்பதற்குச் சிறிது வேளையின்முன் சாதாரண கிறிமினல் கைதிகளும், அரசியல் கைதிகளுமான இருபாலாருக்கும் பொதுமன்னிப்பு அருளுவதான அதிகாரபூர்வமான அறிக்கை பிரகடனஞ் செய்யப்படலாயிற்று.

அவர் மேன்மாடி சென்றதும் மூன்றுலட்சம் பேருக்கு மேற்பட்ட ஸ்பானிய மக்களின் சோபன வாழ்த்துகளை மகிழ்ச்சிபொங்க ஏற்றுக்கொண்டார். அவருடைய ஆட்சி காலத்திலே இத்தகைய மகாப்பெரிய சிநேகபூர்வமான, தேசப்பற்று மிக்க மக்களின் மாபெரும் சனத்திரள் ஒன்று முன்னெருபோதுமே காணப்படவில்லை.

ஜெனறல் பிருங்கோ அத்தருணம் இராணுவ உடை அணிந்தவராய், கடும்வெயிலையும், 78 வயதடைந்துள்ள தமது விருத்தாப்பியத்தையும் பரவாய்பண்ணாது முடிமன்னர் போல் நின்று பேசியபோது, பூர்பனின் ஜுவான் கார்லோஸ் இளவரசருக்கு அரசபதவியைக் கையளிக்க வழிவகுக்குமாறு தாம் இளைப்பாற எண்ணுவதாகப் பரந்த வதந்திகளை உத்தண்டத்துடன் மறுத்துநின்றார்.

"இறைவன் உயிரையும், சுத்தமான நீதித்தீர்ப்பையும் எனக்கு அருளுகிறவரையிலே இராச்சியத்தின் தலைமைப்பதவியைத் தொடர்ந்து வகித்திருப்பேன்" என்று உங்களுக்கு உறுதிவாக்களிக்க மற்றும்ஒருதரம் ஆசிக்கின்றேன் என்று அவர் தெரிவித்தபோது, "பிருங்கோ, பிருங்கோ, பிருங்கோ என்று சனக்கூமாம் ஒரேகுரலாய் ஆர்ப்பரித்தது. அருளப்ப பாப்பாண்வர் திருமுடிசூடியவிழா ஞாபகார்த்த


(தொடர்ச்சி 5-ம் பக்கம்)


### ஒற்றுமை முன்னேற்றத்துக்கு இது அவசியமில்லை

கிறிஸ்தவ சபைகளின் ஒற்றுமை முயற்சியைத் துரிதப்படுத்துவதற்காக அண்மையில் ஜேர்மனி தேசத்திலிருந்து ஒற்றுமை முன்னேற்ற இயக்கத்தைச் சேர்ந்த பல புரொட்டஸ்தாந்து சமையத்தினர் பரிசுத்த பாப்பரசருக்குச்செய்த விண்ணப்பத்தில் 450 வருடங்களுக்கு முன் பாப்பரசர் லூதருக்கு இட்டதடை உத்தரவை வாபஸ் பெறும்படியாகக் கேட்டிருந்தனர். ஆனால் 6-வது சின்னப்ப பாப்பரசரோ கருமத்தை நன்கு ஆலோசித்து அவ்விண்ணப்பத்துக்கு இணங்க மறுத்திருக்கின்றார். ஒற்றுமைக் காரியாலய அதிபர் கருதினால் வில்லபிறன்ட் அடிகள் பாப்பரசரது முடிவை அவர்களுக்கு அறிவித்து, ஒற்றுமை முன்னேற்றத்துக்கு அவர்கள் கேட்டுக்கொண்டது அவசியமில்லையென எடுத்துக் காட்டியிருக்கின்றார்.


கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வீண்

# இளைஞர் உலகு

**அன்புச் சோதரரே!**

அன்புச் சோதரரே! இதோ இளைஞர் உலகின் முதலாம் ஆண்டுமலர் உங்கள் கைகளில் தவழுகிறது. சோதரர் அனைவருக்கும் இளைஞர் உலகின் சார்பில வாழ்த்துக்களைச் சமர்ப்பிக்கிறேன். இந்துசமய சோதரரும் இளைஞர் உலகைப் படிப்பதால் அவர்களுக்குத் தித்திக்கும தீபாவளி வாழ்த்துக்களைச் சமர்ப்பிக்கிறேன். மேலும் இளைஞர் உலகில் பங்குகொண்டு இதனைச் சிறப்பிக்கும் சோதரர்க்கு நன்றி தெரிவிக்கிறேன். அடுத்து எமக்குக கிடைத்த விடயங்கள் அனைத்தையும் இங்கு பிரசுரிக்க முடியாமைக்கு வருந்துகிறோம்.

சோதரன்.

## பைந்தமிழ்ப் பெண்ணே!

மங்கையே உந்தன் மங்காப் புகழை
இங்கேன் வீணாய்க் கெடுக்க முயன்றாய்?
அங்கம் தன்னைக் காட்டி நீயும்
எங்கள் பெருமைக் கேனோ நீயும்
பங்கம் தேட முயலுகின்றாய்?

விண்வெளி வரையும் உயர்ந்த உன்புகழ்
மண் தனில் மாய்ந்து மடிவது ஏனோ?
பண்பினில் சிறந்த பண்டைய மக்கள்
பண்பினில் தோன்றிய பைந்தமிழ்ப் பெண்ணே.

அரைகுறை ஆடை அணிந்து நீயும்
முறை முறையாக வளர்த்த நற் பண்பினை
அரை இடை காட்டிக் கறைப் படுத்தாதே
குறைபல கூறித் தூற்றிட இங்கு
வழியேதும் செய்யாதே!

இ. பேர்னாட்

## சீரான ஆடைகளை அணிவோம்

[செல்வி மேரி ஜோசலின் சூசைப்பிள்ளை]

நாகரிக மோடிகளைப் போற்றும் நல்லவர்களோ அல்லது நல் ஏடுகளோ இருந்தால் "நல்லவனுக்குக் காலம் இல்லை! நீசிக்கு யோகம அடிக்கிறது" என்று தான் நாம் சொல்லவேண்டும். ஆடைபாதி ஆள் பாதியாக அரை நிர்வாண ஆடைகள் அணிந்து நல்லவர்களுக்குச் — சிறப்பாக நாட்டின் நற்பிரஜைகளாக வளரவேண்டிய வாலிபர்களுக்கு—நாச வலைவீசும் மங்கையரை நன்மக்களாவது நல் ஏடுகளாவது எப்படிப் போற்றமுடியும்?

ஆடை அணிவது மானத்தைப் பேணுவதற்கேயன்றி மானத்தைப் பங்கப்படுத்துவதற்கு அல்ல. ஆனால் இக்கால மங்கையர்க்கோ இந்நினைவு இல்லை. கழுத்து ஆழமாக வெட்டப்பட்டு இடுப்புக்குமேல் ஆறு அங்குலம் உயர்ந்து நிற்கும் "இரவிக்கை"யும் இடுப்புடன் இறுகி நின்று தொடை இரண்டையும் சேர்த்து 'விலங்கு' பூட்டி விட்டதுபோல் காட்சியளிக்கும் 'மினிஸ்கேட்டும்' மானத்தை மானபங்கம் செய்வதில்லையா? "நடை உடைகளில் சில புதுமோடிகள் வரப்போகின்றன. அவைகள் எங்கள் ஆண்டவருக்குப் பெரும் துரோகம் புரிவனவாகும். திருச்சபைக்கு ஒரு புதுமோடியும் இல்லை. எங்கள் ஆண்டவர் எப்பொழுதும் ஒரேமாதிரியானவர்" என்பதே பத்திமாபதியில் தேவதாயாரின் காட்சியைப்பெற்ற புனித பசிந்தா தனது மரணப்படுக்கையில் மொழிந்த நன்மதியாகும்.

"திருச்சபைக்கு ஒரு புதுமோடியும் இல்லை!" எனின் இறைமக்களாகிய —கத்தோலிக்க மாதர்— எமக்கு ஏன் இந்தப் புதுமோடிகள். அங்க அமைப்புகளை அப்பட்டமாகக் காட்டி நிற்கும் இந்த ஒட்டல் உடைகளாலும், நைலோன் எனப்படும் 'கண்ணாடிப் போர்வைகளாலும், —மதுவகைதானும் மனிதனுக்கு ஊட்ட முடியாத போதையை மதி மயக்கத்தை —மங்கையர் நாம் ஏற்படுத்தி வளர்ந்தவருக்கும் வாலிபருக்கும் காம உணர்வைக் கிளறிவிட்டு அவர்கள் கால் இடறி விழும்படி செய்கிறோம். இறைமக்களாகியநாம்—இறைவனின் பிரஜைகளான ஆன்மாக்களை—இவ்விதம நாசம் செய்யலாமா?

அணு ஆயுத சக்திகளினால் உலகில ஏற்படும் அழிவைக் காட்டிலும அதிகமான அழிவை எங்களின் அலங்கோல ஆடைகள் ஆன்ம உலகிற்கு உண்டுபண்ணி வருவதால் 'இவை எங்கள் ஆண்டவருக்குப் பெருந்துரோகமே!" என்பதைச் சிந்தையில் கொண்டு—சீ! உடைகளை விட்டு சீரான உடைகளை அணிவோமாக!

### மணி மொழி

அறிவுபெற விரும்பினால் நாவை அடக்கும் அறிவைப் பெறுவாய். —லவாட்டர்

முடியுமானால் பிறரைவிட அறிவாளியாயிரு. ஆனால், அதைப் பறைசாற்றாதே. —பீல்ட்

இயற்கை கடவுளை வெளிப்படுத்துவது. கலை மனிதனை வெளிப்படுத்துவது. —லாங்பெல்லோ

## பொறுக்கு மணிகள்

**முயற்சி:—**

கெல்லிலிருந்து உமியும், செம்பிலிருந்து களிம்பும் நீங்குவதுபோல முயற்சியுள்ளவனிடமிருந்து அறியாமையும், மனதிலுள்ள வீண் எண்ணங்களும் நீங்குகின்றன.

**அன்பு:-**

அன்பு தேவராச்சியத்தின் மூலைக்கல். வாழ்வின் உயிர்; எல்லையற்றது; நித்தியமானது; கடவுளின் வடிவம்.

**ஒழுக்கம்:-**

நல்லொழுக்கம் உயர்ந்த வாழ்வை அளிக்கும். தாழ்ந்தவனை உயர்ந்தவனாக்கும். ஒழுக்கம் தவறினால் அதை எளிதிற் பழுதுபார்க்க முடியாது.

**ஈகை:-**

இரப்பவருக்கு ஈயவேண்டும். ஈவதில்தான் ஆனந்தமிருக்கிறது.

சேகரிப்பு — **ஜோசப்பின்**

## இளமை பற்றி இவர்கள்

நீரில் தோன்றும் குமிழியைப் போன்றது இளமை

— குமரகுருபரர்

இளமை, உற்சாகம், கனிவு இவை வசந்தகால நாட்கள் போன்றவை. என் இதயமே அவை விரைவில் மறையும் என்று வருந்தாதே. அவற்றை விரைவில் அனுபவிக்க முயற்சி செய்.

— டுக்காட்

வாழ்நாளில் இனியபருவம் இளமை. இதை நாம் முதுமையில்தான் உணருகிறோம்.

— கிளேடர்

இளமையில் கல்வி சிலையில் எழுத்து.

— ஔவை

வாழ்வின் அடித்தளம் இளமையில்இருந்து எழுகிறது. உள்ளும் புறமும் பக்குவப்பட வேண்டியது இப்பருவமே. பெற்றோரின் கடமையும், சேவையும் இப்பருவத்தில்தான் வேண்டும்.

— ஓர் அறிஞர்

இளமை என்பது அறியாமல் புதிதாய் வைத்திருக்கக் கூடிய ஆடைபோன்றதல்ல. இளமைஉள்ளபோதே அணிந்து கொள்ளவேண்டும். அன்றேல் விரைவில் கந்தையாகிவிடும்.

— பாஸ்டர்

தொகுப்பு: ஈனு. பெனு.

## குண்டுசிக்கு மதிப்பளித்தவர்!

அகிலம் போற்றும் அகிம்சாமூர்த்தியான மகாத்மா காந்தியின் நினைவு (பிறப்பு) தினம் அண்மையில் அகிலமெங்கும் கொண்டாடப்பட்டது. இந்த மகாத்மாவுக்கு இளைஞர் உலகு தனது இரு கரம் குவித்து அஞ்சலி செலுத்துகிறது.

அன்னாரின் வாழ்வில் நடைபெற்றசம்பவம்ஒன்றைநேயர்களுக்குச் சமர்ப்பிக்கிறோம். கடல்மார்க்கமாக மகாத்மா லண்டனுக்குச் சென்றுகொண்டிருந்தார். கப்பலில் ஒரு ஐரோப்பியர் தினமும அவரை ஏளனம்செய்வதும், நகைப்பதும், திட்டுவதுமாயிருந்தார். ஒருநாள் காந்தியைப்பற்றி மிகவும் கேவலமான முறையில் ஒரு கவிதை எழுதி அவர் கையில் கொடுத்தார்.

காந்தி எதுவும் பேசாமல் அக்கவிதை எழுதப்பட்ட கடதாசிகளை இணைத்த குண்டூசியை மட்டும் எடுத்துவிட்டுக் காகிதத்தைக் குப்பைக் கூடையில் வீசினார். அப்போது அந்த ஐரோப்பியன், "காந்தியாரே அதையும் ஒரு தரம் படியும்; அதிலும் ஏதாவது நல்ல பொருள் இருக்கும்" என்றான். காந்தி அதற்கு, "ஆமாம் அந்த நல்ல பொருளை எடுத்துக்கொண்டேன்" என்றார்.

இப்படி ஏளனத்துக்கு எதிராக இன்சொல் பேசி அந்த ஐரோப்பியரை நாணவைத்தார் காந்தி. நாமும் இவ்வாறே நடக்கவேண்டும். ஒரு குண்டூசிமுதலாய் எமக்கு ஒருநேரத்தில் உதவக்கூடும். இதுபோலவே வாழ்க்கையில் சிறிய பல விடயங்களில் நாம் கவலையற்றிருக்கிறோம். சிறிய விடயங்களில் கவலையற்று இருந்தால் எந்த ஒரு பெரிய காரியத்தையும் சாதிக்கமுடியாது. தெருவில் அல்லது வீட்டில்தானும் கவனிப்பாரின்றிக் கிடக்கும் ஊசி, ஆணி, குண்டூசி போன்றவற்றை எடுத்துப்பத்திரப்படுத்துவதினால் பெரிய பல ஆபத்துக்களைத் தடுக்க உதவுகிறோம். அதுமட்டுமல்லாது ஒரு நேரத்தில் எமது தேவைகளையும் பூர்த்திசெய்ய முடிகிறது.

எனவே எம்மை வெறுப்பவர், பகைப்பவர்களுக்கு முதலாய் இன்சொல் பேசி எம்மாலான உதவிகளைச் செய்ய முன்வருவோமாக.

—திராட்சையூரான்

## ஜெயமளிக்கும் ஜெபமாலை

இது ஐப்பசி மாதம் — இல்லை, ஜெயமளிக்கும் ஜெபமாலையின் மாதம். ஆலயங்களிலே — குடும்பங்களிலே ஜெபமாலையின் ஓசை காற்றிலே கலந்து வருகிறது. பக்திமுயற்சிகளில் எல்லாம சிறந்த இப் பக்திமுயற்சியை மனிதர்கள் ஆரம்பிக்கவில்லை. அன்னைமரியே விண்ணிலிருந்து மண்ணகம்வந்து தந்த மாலை. நரகலோகர் கண்டு நடுங்கும் மாலை. விண்ணகம் சேர்க்கும் ஏணியான எழில் மாலை. துன்பம் துடைக்கும் துடைப்பமான மாலை, இனப வாழ்வு அருளும் அன்பு மாலை.

இப்படியே இந்த மாலையின் மாண்பைக் கூறிக்கொண்டே போகலாம். எமது நாளாந்த வாழ்க்கையில் இடம்பெறவேண்டிய பக்திமுயற்சிகளில் இது முக்கிய இடம் வகிக்கவேண்டும். ஐப்பசி மாதத்தில் மட்டுமலல நாள்தோறும் செபமாலை செபித்து அன்னையின் நல்லருள் பெறுவோமாக. இளைஞரை இன்பவாழ்வுக்கு இட்டுச்செல்லும் இம் மணிமாலையை என்றும் ஓதி அமலமரியின் அருள் பெறுவோமாக.

—இ. பேர்னாட்

### இளைஞர் உலகு

அறிவை வளர்க்கும்
ஆற்றலைத் தூண்டும்
இன்பம் பயக்கும்
ஈகையை உருவாக்கும்
உயர்வைக் காட்டும்
ஊக்கத்தை வளர்க்கும்
எழிலைக் கூட்டும்
ஏற்றம் காட்டும்
ஐக்கியம் உருவாக்கும்
ஒருமை விளைக்கும்

எனவே, இளைஞர் உலகிற்கு எழுதுங்கள்! இளைஞர் உலகைப் படியுங்கள்!!

— அமலி இல்லம் —

## குப்பையோ! குப்பை!!

பெரிய பட்டினங்களில் நாள் தோறும் குவியும் குப்பைகளை என்ன செய்வதென்ற பிரச்சினை அதிகாரிகளைப் பலநாள் சிந்திக்க வைத்தது. இதே நேரத்தில் மேற்குப் பேர்லின் நகரில் உள்ளவர்கள் ஒரு புது வழியைக் கண்டனர்.

பல்லாயிரம் கன அடியுள்ள குப்பைகளைப் பயன்படுத்திச் சீமெந்து செய்யும் வழியைக் கண்டறிந்தனர். இம்முறை மக்களுக்குப் பெரும் உதவியாக இருக்கும். நாள்தோறும் அதிகமாகக் குவியும் குப்பையினைக் கொட்ட இடமில்லாது திண்டாடும் இவ்வேளை இந்தவழி ஒரு வரப்பிரசாதமாக அமைகிறது.

இது ஒருபுறமிருக்க சீமெந்தின் விலையும் நாளுக்குநாள் அதிகரிக்கிறது. இவ்விரண்டு பிரச்சினைகளையும் ஒரே நேரத்தில் தீர்க்க முனைந்தனர் அறிஞர் பலர். இதன் விளைவுதான் குப்பையிலிருந்து சீமெந்து முறை.

இதற்கு இப்போது ஒன்பது கோடி ரூபாய் செலவு செய்து கருவிகளையும் பொறிகளையும் அமைக்கிறார்கள். இந்தக்குப்பை நமது நாட்டில் விவசாயிகளுக்கு ஒரு வரப்பிரசாதமாக அமைந்துள்ளது.

—திராட்சை யூரான்.

ஞானி வீரனிலும் வல்லவன்; அறிவுள்ளவன் பராக்கிரமசாலியிலும் பலவான்.

*மரியாயின் சேனை — சிறப்பு அனுபந்தம்*



# பரிசுத்த பாப்பரசர் மரியாயின் சேனையாளருக்கு கூறியது

**[புரட்டாசி 5ஆம்தேதி ஞாயிற்றுக்கிழமை பிலிப்பைன்ஸ் தேசத்திலிருந்து வந்திருந்த "மரியாயின் சேனை"க் குழுவினருக்குப் பாப்பரசர் பேட்டியளித்தார்].**

பிலிப்பைன்ஸ் தேசத்திலிருந்து வந்திருக்கும் மரியாயின் சேனை அங்கத்தவர்களுக்கு விசேஷ நல்வரவு கூறுகின்றோம், எம்மைக் காண்பதற்காகப் பிரயாணத்தை இடையில் உரோமாபுரியில் நிறுத்தியிருக்கிறீர்கள் இதற்காக உங்களுக்கு நன்றி. சேனை யூபிலியில் பங்குபற்றுவதன்மூலம் உங்கள் சொந்தவாழ்வில் அநேக அருட்கொடைகளையும், உங்கள் அப்போஸ்தலத்துவத்தில் புதிய ஆர்வத்தையும் அடைந்து கொள்வீர்களாக, உங்களையும் உங்கள் நாட்டைச் சேர்ந்த எல்லாச் சேனையாளரையும் ஆசீர்வதிக்கின்றோம். இறைவனின் தூய அன்னையாகிய மரியாயின்மூலம் உங்கள்மீதும், உங்கள் அன்பிற்குரியவர்மீதும் இறைவன் தமது அரும்பெரும் கொடைகளைப் பொழியவேண்டுமெனப் பிரார்த்திக்கிறோம்.

# "சந்தோஷத்தின் காரணம்" மரியாயின் சேனை

மரியாயின்சேனைப் பொன் யூபிலிவிழாவின்போது, சேனையை அடிப்பிட்டவரான திரு. பிறுங்டங் அவர்களுக்குச் சோபன வாழ்த்துக்கூறி, அயர்லாந்தின் அதி மேற்றிராணிமார், மேற்றிராணிமார் அனைவரும் அவருக்கு எழுதிய இணைத் திருமுகம் ஒன்றிலே, 'சேனை ஸ்தாபகமான ஆரம்பதலமாகிய டப்ளின் நகருக்கு மட்டுமல்ல, ஆனால் அயர்லாந்து தேசத்துக்கும், கத்தோலிக்கு உலக முழுவதுக்குமே அது சந்தோஷத்துக்குக் காரணமாகும்,' என்று அறிவித்திருக்கிறார்கள். இந்தப் பொன் யூபிலி விழா சென்ற புரட்டாசி மாதம் 4ஆம் திகதி முதல் ஒருவாரகாலமாக அங்கு சிறப்பாகக் கொண்டாடப்படலாயிற்று.

சேனையின் மகத்தான சேவைகளைப் புகழ்ந்து பாராட்டி யூபிலிவிழாவின் தலையாய கொண்டாட்டம் நடந்தேறிய டப்ளின் நகரைநோக்கி அந்த வாரமுழுவதும் அகிலமுழுவதிலுமிருந்து வாழ்த்துச் செய்திகள் போய்ச் சரிந்த வண்ணமிருந்தன. ஆங்கு புனித பிறென்டன் ஆஸ்பத்திரி மைதானத்தில் நிறைவேறிய யூபிலிப் பூசையின்போது சேனையை அடிப்பிட்டவரான திரு. பிறுங்டவ் அவர்கள் பலங்குன்றி மெலிந்துபோன உருவமாய்க் காட்சியளித்தார். அயர்லாந்திலே பாப்பரசரின் ஸ்தானிகராய் இருந்துவருகின்ற அலிபிறுண்டி அதிமேற்றிராணியார் மனோற்சாகத்துடன் அவரை வாழ்த்தினின்றார். முதல்நாள் சேனையின் பிறந்தவிடமாகிய மைறு இல்லத்திலே ஒரு கல்வெட்டு நிறுவப்பட்டது.

1921ஆம் ஆண்டு நிறுவப்பட்டதிலிருந்து வெளிநாடுகளிலே பிரஸ்தாபமற்றிருந்த மரியாயின் சேனை இரண்டாவது உலக யுத்தகாலத்தில் லிவர்ப்பூர் மேற்றிராசனத்திலுள்ள சிறியமான் நிலிலிருந்து ஜேர்மனிக்கும், பெல்ஜியத்துக்கும கொண்டுசெல்லப்பட்டு அங்கு பரவலாயிற்று. எவ்வாறு? அந்நிலிருந்த யுத்த கைதிகள் முகாங்கள் மத்தியில் சேனைநடத்திய அதிசயத்துக்குரிய தொண்டுகள் அந்த யுத்தகைதிகள் மத்தியில் பணியாற்றிவந்த ஜேர்மனிய, பெல்ஜிய விசாரணைக் குருவர்களை வசீகரித்துப் பெரும் அருட்சினை உண்பெண்ணின. அதன் விளைவாக யுத்தம் முடிந்தபின் அவர்கள் தங்கள் சொந்தநாடுகளிலே மரியாயின் சேனையை ஸ்தாபித்தார்கள்.

டப்ளின் நகரிலே பிரான்சிஸ் வீதியிலுள்ள மைறு இல்லத்தில் மரியாயின்சேனை அடியிடப்பட்ட பொன் யூபிலியின் பொன்னான தினம் 1971ஆம் ஆண்டு புரட்டாசிமாதம் 7ஆம் திகதியாகும். திரு. பிறுங்டவ் அவர்களது திருவருள் தூண்டுதலினதும், வழிநடாத்துதலினதுங்கீழ் ஒரு சிறு தொகையினரான கத்தோலிக்கர் அங்கு ஒன்றுகூடினார்கள்.

(மறுபக்கம் பார்க்கவும்)

## மரியாயின் சேனையின் இன்றைய தலைவருக்கு பரிசுத்த பாப்பரசரின் நன்றிக் கடிதம்

மரியாயின்சேனையின் இன்றைய தலைவர் திரு. ஜேம்ஸ் கமின்ஸ் என்பவரே: பரி. தந்தை 6-வது சின்னப்ப பாப்பரசர் இவருக்கு ஒரு விசேஷ நன்றிக் கடிதம் எழுதியிருக்கின்றார். அதில் சென்ற 50 வருட காலமாக மரியாயின்சேனை அங்கத்தவர்களும் தலைவர்களும், சுவிசேஷத்தை உலகமெங்கும் போதிக்கும் வேலையில் செய்திருக்கும் ஒப்பற்ற சேவைகளுக்கும் தியாகங்களுக்கும் நன்றிகூறி, 50வருட நிறைவு காண்பதில் அங்கத்தவர்களுக்குள்ள மகிழ்ச்சியில் தாமும் ஒன்றித்து வருங்கால வேலைகளின் சித்திக்காகத் தமது செபங்களையும் வாக்குப்பண்ணி, உலகின் சகல பாகங்களிலுமுள்ள சேனை அங்கத்தவர் யாவருக்கும், அவர் குடும்பங்களுக்கும் தமது அப்போஸ்தொலிக்க ஆசீர்வாதத்தையும் அனுப்பியிருக்கிறார்

## யாழ்-ஆயர் அருள் ஆசீர்



கடந்த ஐம்பது ஆண்டுகளாக மரியாயின் சேனையின் வழியாகத் திருச்சபையில் நடைபெற்ற அப்போஸ்தலிக்க சேவைக்காக மரியாயின்வழியாக இறைவனுக்கு நன்றி செலுத்துவதே இப் பொன் விழாவின் சிறந்த நோக்காகும்.

கடந்த காலத்திலிருந்து எவ்வளவோ வித்தியாசமும் விநோதமுமானது வரவிருக்கும் காலம்; இவ் வருங் காலத்திற்குகந்த அப்போஸ்தலிக்க சேவையின் உருவத்தையும் திட்டத்தையும் விபரமாக ஆராயவேண்டும். இப்பணியை விழாவையொட்டி நடைபெறும் பேருரைகளிலும் உரையாடல்களிலும் செய்வீர்களென்பது எனது விருப்பம்.

எங்களுடைய மறைமாவட்டத்தில் ஆன்மாக்களைப் புனிதப்படுத்தவும் இறையரசைப் பரப்பவும் இறைவனால் தேர்ந்தெடுக்கப்பட்ட கருவி மரியாயின் சேனை. ஆகையினால் சேனையாளர் பரிசுத்தமாகவும் ஆன்மவாஞ்சையுடையவர்களாகவும், பொருத்தமான கருவிகளாகவும் செயற்பட வானகத்தாய் அவர்களோடு என்றும் இருக்கவேண்டுமென்பதே எனது பொறுப்பான ஆசையும் அருள்நிறை ஆசீருமாகும்.

ஆயர் இல்லம், கிறீஸ்துவிலும் மரியாயிலும்
யாழ்ப்பாணம், உங்கள் பிதா,
17-10-71. + ஜே.எமிலியானுஸ்பிள்ளை, ஓ.எம்.ஐ.

### கருதினல் வில்லோவின் கடிதம்

# 50-வது ஆண்டு விழாவின்போது மரியாயின் சேனைக்குப் பாராட்டு

**மரியாயின்சேனை ஸ்தாபகமான 50-வது வருட விழாவையொட்டி, பாப்பரசரின் அரசாங்க அமைச்சரான கருதினல் வில்லோஅவர்கள் சேனைத் தலைவருக்கு அனுப்பிய கடிதம் பின்வருமாறு :**

அன்பிற்குரிய திரு. கமின்ஸ் அவர்களுக்கு:

ஆண்டவரின் மீட்புவேலையை மரியாயின் கொடிக்கீழ் தொடர்ந்து அகில உலகிலும் அமைதியோடு ஆற்றிவரும் சேனை டப்ளின்நகரில் எளிமையாக, ஆயினும் தெய்வாதீனமான விதத்தில் உருவாகி ஐம்பது ஆண்டுகள் கடந்துவிட்டன.

இத்தனைகாலமும் இராயப்பரின் வழித்தோன்றல்களான பாப்புமார் உங்கள் இயக்கத்திற்கு ஊக்கம்அளிப்பதற்குச் சற்றும் பின்நின்றதில்லை. ஆயினும் இச்சந்தர்ப்பம் மரியாயின் சேனைக்குஇருக்கும் நன்மதிப்பை மீண்டும் வெளிப்படுத்துவதற்கு ஒரு தக்க தருணமாகும். நீங்கள் திருச்சபையின்பணிக்கே ஒருமனத்தோடும், உள்ளத்தோடும் உங்களை அர்ப்பணம் செய்கிறீர்கள். இந்நினைவு தினத்தில் நீங்கள் நன்றித்துதி செலுத்துகையில் பாப்பரசரும், உங்களோடு ஒன்றித்திருக்கிறார் என்பதை உங்களுக்குத் தெரிவிப்பது எனக்கு மகிழ்ச்சிதரும் ஒரு பணியாகும்.

ஆரம்ப நாள்முதலே தலைமைச் சுமையைத் தாங்கிய முன்னோடிகள் பலர் உங்கள் மத்தியில் இருக்கின்றனர். அவர்களது ஆர்வம், தாழ்மையான சேவை ஆகியவற்றின் மூலம் இறைவன் ஆற்றிய அரும்பெருங் காரியங்களைக் குறித்து அவர்களோடு சேர்ந்து நன்றி செலுத்தாமலிருக்க முடியாது. இவ் வேளையில் எமது சிந்தனை உங்கள் ஸ்தாபகராகிய பிராங் டவ்வை நோக்கியும் சேனை அப்போஸ்தலத்துவத்திற்காகத் தம்மை அர்ப்பணித்த ஆன்ம இயக்குநர்கள், பொதுநிலைத் தலைவர்களை நோக்கியும் திரும்புவது இயல்பு. திருச்சபையின் தாயாரும், அப்போஸ்தலரின் இராக்கினியுமான மரியாயை அவர்கள் பெருந்தன்மையில் விஞ்சிவிட முடியாதென்பது நிச்சயம்.

இந்த அரைநூற்றாண்டு காலத்தில் சேனை மேற்கொண்ட ஊழியங்களின் எல்லைக்கோட்டை வரைந்து காட்டுவதற்கே நீண்டநேரம் எடுக்கும். சுவிசேஷத்திற் கூறப்பட்ட உவமைக்கேற்பசிறியதொருகடுகு மணியிலிருந்து முளைத்து வளர்ந்த மாபெரும் விருட்சத்திலிருந்து விளைந்த பலன்களாகிய பரிசுத்ததனம், சில சமயத்தில் வீரத்துவம் வாய்ந்ததான சாட்சி, ஆர்வமிக்க அப்போஸ்தலத்துவம் ஆகியவைக்கு எல்லாக் கண்டங்களிலுமுள்ள ஆயர்கள் சான்று பகர்வார்கள்.

### செபமே உந்தும் சக்தி

மீண்டும் மீண்டும் துணிச்சலுடனும், கட்டுப்பாட்டுட

(மறுபக்கம் பார்க்க)



வரப்பிரசாதங்களின் மத்தியஸ்தியாகிய
மாசில்லாத மாதாவே,
மரியாயின் சேனையின் சீவியத்தினதும்
சேவையினதும் நடுநிலையமாகிறாள்.

# மரியாயின் சேனையின் நிர்வாகம்

"மரியாயின் சேனையின் அமைப்புமுறை மிகச் சிறந்த ஒன்றாகும்" வையம் போற்றும் தூயதந்தை இருபத்திமூன்றாம் அருளப்பர் புகழ்ச்சி உரை இது. இந்தப் புகழ்ச்சியுரைக்குக் காரணம், மரியாயின் சேனையின் நிர்வாகம் வியத்தகுமுறையில் வெற்றிகரமாகச் செயல்பட்டு வருவதுதான். சேனையின் கிளைச்சங்கம் ஒவ்வொன்றும் பிரெசிடியம் என்னும் பெயர் பெறுகின்றது. சென்றவிடமெங்கும் வென்று முன்னேறிய உரோமைப் பட்டாளத்தில் ஒரு குறிப்பிட்ட பணியில் ஈடுபட்டிருந்த படைப்பகுதிக்கு பிரெசிடியம் என்னும் பெயர் வழங்கப்பட்டது. அதேபாணியில் அணிவகுக்கப்பட்ட படையைப் போல் பங்குகளிலே பணிபுரியும் மரியாயின் சேனையின் கிளைச்சங்கத்திற்குப் பிரெசிடியம் என்னும் பெயர் பொருத்தமாக எடுத்தாளப்படுகின்றது. மரியன்னையின் சிறப்பியல்புகளையோ, வாழ்க்கை நிகழ்ச்சிகளையோ குறிக்கும் பெயர்கள், பிரெசிடியங்களின் பெயர்களாகப் போற்றப்படுகின்றன. (எடுத்துக்காட்டாக: சாகரத்தாரகை பிரெசிடியம், எலிசபெத்தைச் சந்தித்த மரியாள் பிரெசிடியம்)

மேல் நிர்வாக சபைகளுடையவும் பங்குத் தந்தையின் அல்லது மறை ஆயரின் அனுமதியின்றி எந்தப் பங்கிலும் ஒரு பிரெசிடியத்தை அமைத்தல் கூடாது. உறுப்பினர்கள் ஒருமித்து வாரந்தோறும் நடத்தும் பொதுச் செபமே கூட்டத்தின் முக்கியமான நோக்கமாதலால் எக்காரணத்தை முன்னிட்டும் வாரந்தோறும் பிரெசிடியக்கூட்டம் நடத்துவதை விட்டுவிடக்கூடாது. ஒவ்வொரு பிரெசிடியத்தை நிர்வகிக்கும் ஆன்ம இயக்குனரும், தலைவர் துணைத் தலைவர், செயலாளர், பொருளாளர் ஆகியோரும் கியூரியாவின் உறுப்பினர்களாக, பிரெசிடியத்தின் பிரதிநிதிகளாகப் பணியாற்றுவார்கள். நெப்போலியன் செப்பினான்: "திறமையற்ற போர்வீரர்கள் இருக்கமாட்டார்கள்; படைத் தலைவர்கள்தான் திறமையற்றவர்களாயிருப்பார்கள்." வீரர்களின் திறமை தலைவர்களின் பயிற்சியைப் பொறுத்திருக்கின்றது என்னும் உயரிய உண்மையை இது வலியுறுத்துகின்றது. ஆகவே உறுப்பினர்களில் மிகுந்த திறமையுள்ளவர்கள்தான் பிரெசிடியநிர்வாகிகளாக நியமிக்கப்படல்வேண்டும்.

இரண்டு அல்லது இரண்டுக்கு மேற்பட்ட பிரெசிடியங்கள் ஒரு மாநகரிலோ, ஒரு நகரிலோ, ஓர் ஊரிலோ இயங்குகின்றனவென்றால் அவற்றை ஆள்வதற்கு அமைக்கப்படும் நிர்வாக சபையே கியூரியா. பிரெசிடியங்களின் நிர்வாகிகளே கியூரியாவின் அங்கத்தினர்கள் ஆகின்றார்கள். பிரெசிடியங்களின் இதயமாகவும் மூளையாகவும் செயல்படுவது கியூரியா. சேனையின் வாழ்வும் தாழ்வும் அதன் கியூரியாக்கள் இயங்கும் முறையைச் சார்ந்திருக்கும். பதினெட்டு வயதை எட்டாத சேனையார் எவரும் முதியோர் கியூரியாவில் உறுப்பினராய் இருத்தல் இயலாது; எனவே அந்த வயதிற்குக் கீழ்ப்பட்டவர்களுக்கென சிறுவர் கியூரியா உருவாக்கப்படலாம். கியூரியாவின் இரண்டு பிரதிநிதிகள் பார்வையாளராகப் பிரெசிடியர்களுக்கு அனுப்பப்படவேண்டும். பிரெசிடியங்கள் பெற்றிருக்க வேண்டிய ஏடுகளைப் பார்வையிட்டு அவை நன்றாக வரையப்பட்டுள்ளனவா என்றும், சேனையார் ஒவ்வொருவரும் மூன்றுமாத சோதனைக் காலத்தை திருப்திகரமாக முடித்தபின வாக்குறுதி வழங்கியிருக்கின்றனரா என்றும் கவனமாக ஆய்ந்துபார்க்க வேண்டும்.

ஒரு மறைமாவட்டத்திலுள்ள எல்லா கியூரியாக்களையும் மேற்பார்வையிடும் அதிகாரம் பெற்றுள்ள கியூரியா கொமிசியம் என அழைக்கப்பெறுகின்றது. கொமிசியத்திற்குக் கீழ் இயங்கும் ஒவ்வொரு கியூரியாவும் தத்தம் பிரதிநிதிகளை கொமிசியக் கூட்டத்திற்கு அனுப்பிவைக்கும்.

மாநிலம் ஒன்றிலே மரியாளோடு இணைந்து பாபணிகள் புரிந்துகொண்டிருக்கும் பல்வேறு படைகளை ஆள்வதற்கென அமைக்கப்படும் நிர்வாகச் சபைக்குச் செனத்துஸ் என்னும் பெயர் சூட்டப்பெற்றுள்ளது. நாட்டின் விரிவுக்கும், தேவைக்கும் ஏற்ப இரண்டோ மூன்றோ செனத்துஸ் சபைகளும் அமைக்கப்படலாம். சேனையின் தலைமையகமான கன்சிலியத்தோடு நேரில் அமைக்கப்பெற்றிருக்கும் செனத்துஸ்சபை ஒவ்வொன்றும் தத்தமக்குரிய ஆட்சி எல்லைக்குள் தாம்பெற்றுக்கொண்ட அதிகாரத்தைச் செலுத்தும்.

திருமறையின் அதிகாரத்திற்குப் பணிந்து சேனைச் சட்டதிட்டங்களை ஆக்கவும் நீக்கவும், மாற்றங்கள், புகுத்தவும், விளக்கங்கள் வழங்கவும் ஆற்றல்பெற்ற தலைமை நிர்வாகச் சபைக்கு கன்சிலியம் என்று பெயர். டப்ளினில் இயங்கும் இச்சபை தன்னோடு நேரில் இணைக்கப்பட்டுள்ள சேனைச்சங்கங்களின் பிரதிநிதிகளை அங்கங்களாகக் கொண்டுள்ளது. இக்கன்சிலியத்தின் ஆன்ம இயக்குநர் அயர்லாந்து நாட்டு மறை ஆயர்களால் நியமிக்கப்படுகின்றார்.

நன்றி: கத். சேவை.

# கருதினல் வில்லோவின் கடிதம்

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

...னும் சேனையானது பல புதிய கஷ்டமான முயற்சிகளில் ஈடுபட்டிருக்கிறது. மரியாயின் தவறாத உதவியிற் கொண்டுள்ள நம்பிக்கையாற்றான் சாதாரண விசுவாசியும் இதைச் சாதிக்கக் கூடியதாயிருக்கின்றது. மேலும் இக்கடின அப்போஸ்தலிக்க வேலையோடு திருப்தியடையாமல், பத்திரிசியர் இயக்கத்தின்மூலம் சேனைக்கு வெளியேயுள்ள பலரை இறைவனின் திராட்சைத் தோட்டத்தில் ஊழியர்களாகச் சேர்த்திருக்கிறீர்கள். அத்துடன் உங்கள் அப்போஸ்தலத்துவ ஊழியத்திற்குத் தமது இடைவிடாத செபத்தினால் துணைபுரியும் ஒரு சேனையையும் நீங்கள் திரட்டியிருக்கிறீர்கள்.

செபமும் ஆன்மீகஉருவாக்குதலும்தான் உங்கள் ஊழியத்துக்கு அடித்தளமாயிருந்திருக்கிறது. அதன் வளத்திற்கு இதுவே காரணமாகும். இதில் எல்லாவற்றிற்கும் மேலாகப் பரி. கன்னிமரியம்மாள் காட்டிய ஆன்ம அப்போஸ்தலிக்க வாழ்வின் பூரணமான முன்மாதிரிகையை சேனை பின்பற்றியிருக்கிறது. "அப்போஸ்தலர்களின் இராக்கினியான கன்னிமரியம்மாள் யாவருக்கும் பொதுவான குடும்பக் கவலையும், உழைப்பும் நிறைந்த வாழ்க்கையை இம்மையில் வாழ்ந்தபோது என்றும் தன் மகனோடு நெருங்கி ஒன்றித்திருந்தாள். மீட்பரின் அலுவலிலே முழுவதும் தனிப்பட்ட முறையில் ஒத்துழைந்தாள்." (பொதுநிலையினரின் அப்போஸ்தலத்துவம் 4) "கன்னிமரியம்மாள் தன் வாழ்வில் தாய்க்குரிய அன்பிற்கு மாதிரிகையாய் உள்ளாள். மக்களின் மறுபிறப்புக்காகத் திருச்சபை ஆற்றும் அப்போஸ்தலபணியில் ஒத்துழைக்கும் அனைவருக்கும் அவளின் இத்தாயன்பு எழுச்சியூட்ட வேண்டும்" (திருச்சபை 65) என்ற வத்திக்கான் சங்கத்தின் உரையை சேனை மனதிற் கொண்டுள்ளது.

திருச்சபையின் உலகமீட்பு வேலையில் பொதுநிலையினரிடம் பொறுப்புணர்ச்சியை வளர்ப்பதற்கு அதிகம் துணைபுரிந்த இயக்கங்களுள் மரியாயின் சேனையும் ஒன்று என்பதில் ஐயமில்லை.

சங்கத்தின்பின் புதுப்பித்தலின் காலமாகவும், கொந்தளிப்பின் காலமாகவும் விளங்கும் இவ்வேளையில் மரியாயின் சேனை அங்கத்தவரின் பிரமாணிக்கத்தை உணர்ந்து, இறைவனால் தமது திருச்சபைக்கு நியமிக்கப்பட்ட ஆயர்களுக்கு அதை எடுத்துக் கூறுவதில் பரி. தந்தை பெருமகிழ்ச்சி கொள்கிறார்.

சங்கத்தை அடுத்துவரும் இக்காலத்தில் சங்கப்போதனையின் ஒளியிலே பிறபொதுநிலை இயக்கங்களுடன் தொடர்ந்து உங்கள்பணி பலனளிக்கக் கூடியதான நிலைமைகளை ஆராய்ந்து கொண்டிருப்பீர்கள். புதியதேவைகள், கூடிய சந்தர்ப்பங்கள் நிகழும்போது தேவைப்படின் சிலமாற்றங்களைக்கொண்டுவரவும் ஆலோசனை செய்வீர்கள். மரியாயின் சேனை "மாற்றத்துக்காகவே மாற்றம்" செய்வதை விவேகமுடன் தவிர்த்து வந்திருக்கிறது. ஆயினும் மனப்பான்மையிலும் அத்தியாவசிய முறைகளிலும் ஒன்றுபட்டிருந்தாலும், கலாச்சார வேறுபாடுகளுக்கு மதிப்பளித்து உலகெங்குமுள்ள சேனையாளரின் பரந்த பலதரப்பட்ட அனுபவங்களைச் சேனை இயக்கத்தின் கருத்திலும் முயற்சியிலும் சேர்த்துக் கொள்வது எவ்விதமென்பதை நீங்கள் அறிவீர்கள்.

பரிசுத்த தந்தை மரியாயின் மத்தியஸ்தத்தின்மூலம் தூய ஆவியானவருடைய அருளை உங்கள்மீது பொழியும்படி வேண்டுகிறார். ஆழ்ந்த அன்புடன் உமக்கும் சகல சேனையாளருக்கும் இந்த அப்போஸ்தலத்துவத்தில் உங்களுடன் ஈடுபட்டிருக்கும் சகலருக்கும் தமது விசேஷ அப்போஸ்தலிக்க ஆசியை அளிக்கிறார்.

செபத்தோடு கூடிய என் சொந்த நல்வாழ்த்துக்களும் உங்களுக்கு உரியன.

இங்ஙனம்,
கிறிஸ்துநாதரில் உங்களன்புள்ள,
+ கருதினல் G. வில்லோ

## மேற்கு வங்காள கத்தோலிக்க தேசாதிபதி

1947-ம் ஆண்டு பாரத தேசம் சுதந்தரம் பெற்றதன் பின்பு ஒரு கத்தோலிக்கர் மேற்கு வங்காள பிரிவின் தேசாதிபதியாக நியமனம் பெற்றிருக்கிறார். அவர் அன்ரனி லான்ஸ் லொற்டயஸ் என்பவரே. இவர் கோவாப் பிரதேசத்தில் பிறந்தவர். தேசிய அரசாங்கத்தின் உணவுப் பிரிவுப் பகுதியின் பிரதம காரியதரிசியாகவும், அதன் பின் திரிபுரா பிரதேசத்தின் தலைமைக் காரியஸ்தராகவும் கடமையாற்றியதன்பின், இப்போது மேற்கு வங்காள பிரிவின் தேசாதிபதியாக நியமிக்கப்பட்டிருக்கின்றார்.



முற்காலத்தில் கழுகை ஏந்திய துவசம் உரோமர் சேனைகளை வழிநடத்திச் சென்றது. அதுபோல இன்று புறுவடிவமான தூய ஆவியினதும், வரப்பிரசாதங்களின் மத்தியஸ்தியாகிய மாசில்லாத மாதாவினதும் சாயல்களைத் தாங்கிய துவசம் மரியாயின் சேனையாளரை அப்போஸ்தலிக்க ஞானயுத்தத்தில் வழிநடத்திச் செல்கின்றது.

## சந்தோஷத்தின் ...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

அவர்கள் சேர்ந்து சேனையை இனிது அடியிட்டார்கள். இந்தச் சிறிய ஆரம்பத்திலிருந்து அது உலக முழுவதிலும் இப்போது பரந்திருக்கிறது. தங்கள் சொந்த முகாந்திரங்களுக்காகக் குருத்துவ பதவியிலோ அன்றேல் சந்நியாச, கன்னிகா பதவியிலோ பிரவேசிக்க முடியாதவர்களும், ஆனால், உலகில் தேவதொண்டையும், கன்னிசுத்த மரியம்மாளான அவருடைய திருத்தாயாருக்குச் செய்யும் தொண்டையும், அதிகமதிகமாக விருத்திசெய்ய விரும்புகிறவர்களுமான ஒரு தொகையான சாதாரண உத்தம கத்தோலிக்கர் எப்போதுமே இருந்து வருகிறார்கள். இவர்களுக்கு வேண்டிய தூண்டுதலையும், வழிகாட்டுதலையும், மரியாயின் சேனை அருளுகின்றது.

# நித்திய நரக ஆக்கினை

வினா: இவ்விஷயத்தைப் பற்றிப் பற்பல கேள்விகளை கத்தோலிக்கர்களும் புறசமயத்தவர்களும் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். அவைகட்கு சரியாய் மறுமொழி சொல்ல எங்களுக்கு இயலாமல் இருக்கிறது. இவைகளுக்கு நீர் பாதுகாவலனில் மறுமொழி எழுதும்படி தயவாய்க் கேட்கிறோம்—சி. எ. நா.

விடை: உங்கள் வினாவை அட்டவணைப் பிரித்து ஒவ்வொன்றுக்கும் விடை கொடுப்போம் —சுவாமி வ.உ. யேசுதாசன், ஓ. எம். ஐ.

**1. அப்போஸ்தலருடைய விசுவாசப் பிரமாணத்தில் நரகத்தைப்பற்றி ஒன்றும் சொல்லப்படவில்லை. பொதுவாக "நித்திய சீவியத்தை"ப்பற்றிச் சொல்லுவதை திருச்சபை மோட்சத்தையும் நரகத்தையும் கருதப்பண்ணுகிறதல்லவா?**

அப்போஸ்தலரின் விசுவாசப் பிரமாணத்தில் "நித்திய சீவியம்" மோட்சத்தையும் நரகத்தையும் கருதுகிறது. என்பதற்கு அத்தானேசி அத்தனேசியாரின் விசுவாசப் பிரமாணத்தில் காண்கிறோம். ஏனெனில் அதில் "நன்மை செய்தவர்கள் நித்திய சீவியத்திற்கும், தின்மை செய்தவர்கள் நித்திய அக்கினிக்கும் போவார்கள்" என்று சொல்லப்பட்டிருக்கிறது. மேலும் 4-ம் லற்றின் தாம், திறெந்தின் தும் பொதுச் சங்கங்கள் மனந்திரும்பாத பாவிகளின் நித்திய ஆக்கினையைப்பற்றி வசனித்திருக்கின்றன.

**2. நித்திய நரக ஆக்கினை பாவிகளை வெருட்டி மனந்திருப்புகிறதற்குத் திருச்சபையால் இயற்றி வைத்த போதனையா, அல்லது சருவேசுரன் வெளிப்படுத்திய சத்தியமா?**

அது வேதசாஸ்திரிகள், தீர்க்கதரிசிகள், அப்போஸ்தலர்கள் மூலமாகச் சருவேசுரன் வெளிப்படுத்திய சத்தியமென்று பின்வரும் வேதாகம வசனங்களிலிருந்து அறியலாம். "சபிக்கப்பட்டவர்களே, என்னைவிட்டு அகன்று நித்திய அக்கினிக்குப் போங்கள்" (மத். xxv. 41).

"பாவிகளைக் கடிக்கும் புழு ஒருபோதும் சாகாது; அவர்களை உள்ளும் புறமும் சுடுகிற தீ ஒருபோதும் அவியாது" (இசா. xxxiii. 14).

"வெகுபேர் நித்திய நிந்தைக்கும் எழுந்திருப்பார்கள்" (தானி. xii. 2).

"பொல்லாதவர்கள் ஆண்டவருடைய சந்நிதானத்தில் நின்று தள்ளப்பட்டு, நித்திய தண்டனையை அடைவார்கள்" (2 தெச. i 9).

"மாம்சத்தைப் பின்பற்றினவர்கள் நித்திய அக்கினியை அடைந்தார்கள்" (யூதா. 7).

**3. திறமையான புத்தியும் மிகவும் பெலனுள்ள சித்தமும் உள்ள பசாசுகளின பாவத்திற்கு நித்திய நரக ஆக்கினை கொடுக்கலாம். ஆனால், மிகவும் குறைவான புத்தியும் பெலயீனமுள்ள சித்தமும் உள்ள மனிதருக்கு அப்படிப்பட்ட தண்டனை விதிப்பது நீதியா?**

போதிய புத்தியும் சுயாதீனமும் உள்ள மனிதர் கனங்கொண்ட காரியத்தில் முழு அறிவு அவதானத்தோடும், முழுச் சம்மதத்தோடும் தேவ கற்பனையை மீறி, ஏராளமான பிரசாத உதவிகளைப் பெற்றும் அவைகளைப் புறக்கணித்து மனந்திரும்பாமல மூர்க்கராய் மரணித்தால்தான் நித்திய நரக ஆக்கினைக்கு உட்படுவார்கள். சருவேசுரன் இவர்களுக்கும் எத்தனையோ முறை இரக்கங்காட்டி மன்னித்திருப்பார். எங்கள் ஒவ்வொருவருடைய சீவியங்களை ஆராய்ந்து பார்த்தால், அவை சருவேசுரனுடைய மன்னிப்புகளால்நிறைந்துள்ளன என்று அறியலாம். தேவ மன்னிப்பை முழு அறிவு அவதானம் சம்மதத்தோடு எதிர்க்கிறவர்களுக்குத்தான் இரட்சணியமில்லை. நடுத்தீர்க்கிற நாளிலே சகல மனிதரும் சருவேசுரனுடைய கோணுத நீதியையும் அளவற்ற இரக்கத்தையும் ஏற்றுக்கொள்ளுவார்கள்.

**4. அளவில்லாத நேசமும் இரக்கமுமுள்ள சருவேசுரன் இந்தக்கொடுமையான நரக ஆக்கினையை உண்டுபண்ணியிருப்பாரா?**

ஒருவன் மிதமிஞ்சின குடிவெறியினாலே தன் மூளையைச் சேதப்படுத்திப் புத்தியை இழந்துவிட்டான்; அவனை ஒரு மீகாமச் சபையில் நின்று அப்புறம்பிரித்து வைப்பது அவசியமொழியும் கொடுமையுமல்ல. அதுபோல ஒருவன் சாவான பாவத்தால் சருவேசுரனை புறக்கணித்துவிட்டு மரித்தால், அதனால் அவனுக்குவரும் ஆக்கினை அவசியமானதொழிய கொடுமையானதல்ல.

**5. சருவேசுரன் ஒரு பாவி நரகத்துக்குப் போவான் என்று அறிந்தும், ஏன் அவனை உண்டு பண்ணினார்?**

இவ்வுலகம் சருவேசுரன் மனிதரைப் பரீட்சை பண்ணுகிற இடம் என்று வேதாகமத்தில் வாசிக்கிறோம். "மனிதனுக்கு முன்பாக சீவியமும் மரணமும், நன்மையும், தீமையும் உண்டு; எதை தெரிந்து கொள்வானோ அதையடைவான்" (சர்வப்பி. xv. 18). ஆனால், சருவேசுரன் தம்மை மதித்தெரிகிறவர்களை மாத்திரம் உண்டுபண்ணினால் அவர் செய்கிறது ஒரு போலிப் பரீட்சையாயிருக்கும்.

**6. சருவேசுரன் ஏன் தமது சர்வவல்லமையால் பாவிகள் நரகத்திற்குப் போகாமல் தடுக்கவில்லை?**

சருவேசுரன் மனிதனுக்குக் கொடுத்த கொடைகளுள் சுயாதீனம் மிகவும் உன்னதமும் அவனைத் தாமைப் போலாக்குகிறதுமான நன்மையாம். சுயாதீனத்தினால்தான் மனிதன் சம்பாவனைக்குப் பாத்திரவாளியாகவும் சம்பாவனையை மதிக்கத்தக்கவனாகவும் வருகிறான். சருவேசுரன் தாம் கொடுத்த இந்தக் கொடையைப் பேணாமல், அதற்கு எதிராகப் பாவியை இரட்சிப்பது அவருக்கு முற்றாக ஒவ்வாத காரியம்.

**7. ஒரு நிமிஷத்துக்குள் கட்டிக் கொள்ளுகிற பாவம் எப்படி நம்மை நித்திய ஆக்கினைக்குப் பாத்திரராக்குகிறது?**

ஒரு சாவான பாவத்தினால் நமது சுயாதீன சித்தம் முழு அறிவு அவதானத்துடனும் முழுச் சம்மதத்துடனும் சருவேசுரனை வெறுத்துத் தள்ளிவிட்டு அவர் விலக்கின பிராணியையே தெரிகிறது. இத்தத் தெரிவு நமது மரணத்தில் மாற்றமுடியாத நிலையை அடைகிறது. இதனால் நாம் நித்திய ஆக்கினைக்குப் பாத்திரராகிறோம். ஆகையால் நரக ஆக்கினை நித்தியமாயிருப்பதற்குக் காரணம் நாம் ஒரு நிமிஷத்துக்குள் செய்த தெரிவை ஒருபோதும் மாற்றுமலிருப்பதேயாம்.

**8. சடப்பொருளாகிய நெருப்பானது எவ்விதமாக அரூபியான ஆத்துமத்தையும் பசாசையும் ஊடுருவி உபாதிக்கக் கூடும்?**

நரக நெருப்பு எப்படிப்பட்டதென்பதைப்பற்றி வேதபாரகருக்குள் முழு இணக்கமில்லை. அது ஒருபோதும் அவியாத நெருப்பு என்றும், அது ஆத்துமம் சரீரத்தோடு தொடுத்திருக்குமாப்போல, கெட்ட ஆத்துமங்களோடும் பசாசுகளோடும் இணைக்கப்பட்டிருக்கிறபடியால், அவைகள் தன் அகோரத்தை உணரப்பண்ணும் என்றும் சொல்லுகிறார்கள்.

குறிப்பு: நித்திய நரக ஆக்கினை சருவேசுரனால் வெளிப்படுத்திய சத்தியம். அதற்கும் எங்கள் புத்திக்கும் எதிர்ப்பு இல்லை என்று மாத்திரம் காட்டினோம். ஆனால் அதை எங்கள் புத்தியால் இவ்வுலகில் முழுமையாய் விளங்கிக்கொள்ள முடியாது.

---

*சிந்தனை 3.*

## தீபம்.... தீபம்.... தீபம்....!

தீபம் அன்றாட வாழ்க்கைக்கு அவசியமானது. தீபம் இல்லாவிட்டால் ஏற்படும் நஷ்டம் சொல்லி முடியாது. தீபம் அசுத்தத்தை அகற்றும், ஒளியைக் கொடுக்கும், உணவைப் பதப்படுத்தும். இந்தவகையில் தீபம் உடலுக்குப் பயன்படுகிறது. இவ்வகையில் தீபம் உடலுக்கு உதவுவதுபோல், உள்ளத்திற்கும் பயன்படவேண்டும். உடலுக்கு உதவுவது சடப்பொருளான தீபம். மாறாக, அது உள்ளத்திற்குப் பயன்படாது. உள்ளத்திற்கு உதவும் தீபம்—கிறிஸ்து—தான். அதை அவரே கூறியிருக்கிறார்.

கிறிஸ்து என்னும் தீபம், உள்ளத்திற்குப் பயன்படாமல் போனால், ஏற்படும் நஷ்டம் சொல்லிமுடியாது. உள்ளத்தில் அசுத்தம் சேரும், உள்ளத்தில் இருள் சேரும், உள்ளம் பதனப்படாது. உடலுக்குத் தீபம் பயன்படுவதுபோல் உள்ளத்திற்குத் தீபம்—கிறிஸ்து—பயன்படவேண்டும். அவ்வாறு பயன்பட்டால்தான், உள்ளத்தின் அசுத்தம் அகல, இருள்மறைய, அது பதனமடையும். அன்றாடவாழ்வில் உடலுக்குத் தீபத்தை உபயோகிப்பதுபோல, ஞானவாழ்வில் கிறிஸ்துஎன்ற தீபத்தை உபயோகிக்கிறோமா? இல்லாவிட்டால் இதைப்பற்றிச் சிந்திப்போம். அதன்பயனுக கிறிஸ்து என்ற ஞானதீபத்தை எம் அன்றாடவாழ்வில் உபயோகித்துப் பண்பும் பயனும் பெறுவோம்.

"போதியெனை நொங்காய் ஞானத்தீயே"

சி. எ. செல்வராசா

---

✠

### வெரோனிக்கா யோன்ராசா அமரத்துவமடைந்த 5ஆம் வருட ஞாபகம்

எம் அன்புத் தாயார் எம்மைவிட்டுப் பிரிந்த ஐந்தாவது ஆண்டு பூர்த்தியானது குறித்து அவவின் ஆன்மசாந்திக்காக அச்சுவேலி சஞ்சுசையப்பர் ஆலயத்தில் திருப் பாடற்பூசை ஒப்புக்கொடுக்கப்பட்டது.

இதனைக் காணும் அனைவரும் இவவின் ஆத்ம இளைப்பாற்றிக்காக வேண்டிக்கொள்ளும்படி பணிவுடன்வேண்டுகிறோம்.

ஆண்டவரே தேவரீரால் தெரிந்தெடுக்கப்பட்ட உமது அடியாராகிய வெரோனிக்கா யோன்ராசாவுடைய ஆத்துமத்திற்கு நித்திய இளைப்பாற்றியையும் முடிவில்லாத பிரகாசத்தையும் கட்டளையிட்டருளும் சுவாமி.

றெஜினு சவரிமுத்து
அச்சுவேலி.

---

### ஆசிரியர் தினம்

நாடு முழுவதிலுமுள்ள சகல இன, மத ஆசிரியர்களையும் கௌரவித்து, அவர்களுக்குச் சமூக அந்தஸ்துகள் அளித்து, அவர்களது தொழிலின் மகத்துவத்தை நாடறியச் செய்யுமுகமாகச் சகல பாடசாலைகளிலும் வருடம் ஒருமுறை அகில இலங்கை ஆசிரியர்கள் தினம் ஒன்றைக் கொண்டாடுவிக்கும் திட்டம் ஒன்றைக் கல்வி மந்திரி தயாரித்திருக்கின்றார். பயன் அளிக்குமானால் வருடந்தோறும் ஓர் ஆசிரிய வாரத்தைக் கொண்டாடுவிக்க அவர் உத்தேசித்திருக்கின்றார்.

### நஷ்டஈடு கிடையாது

சென்ற சித்திரை மாதம் நடைபெற்ற பயங்கரவாதத்தின்போது சேதமடைந்த சொத்துகளுக்கும், உடமைகளுக்கும் நஷ்டஈடு கொடுபடமாட்டாது; சித்திரை மாதம் நடைபெற்றது புரட்சியே; அது சர்வசாதாரணமான ஒன்றல்ல; ஆதலால் அப்பொழுது தொழிற்சாலைகளுக்கும், வாகனங்களுக்கும் ஏற்பட்ட சேதங்களுக்கு இன்சூறன்ஸ் கூட்டுத்தாபனம் நஷ்டஈடு வழங்கமாட்டாது; ஏனைய நாடுகளிலும் இந்தக் கொள்கையே அனுட்டிக்கப்படுகிறதென்று தாபனத்தின் ஜெனறல் மனேஜர் தெரிவித்திருக்கின்றார்.

---

## மறைக் கல்விக் கருத்தரங்கு

முல்லைத்தீவு

காலம்:— 18-10-71 திங்கள் காலை 8-30 மணி

இடம்:— முல்லைத்தீவு, றோ. க. பாடசாலை.

நிகழ்ச்சிகள்:—

- விவிலிய வழிபாடு.
- 1-ம் உரை: கிறிஸ்தவ திருமறைக்கல்விச் சபை.
- 11 மணிக்கு; பலிப் பூசை
- 2 மணிக்கு மாதிரிப்பாடம்.
- 2-ம் உரை: கிறிஸ்தவ குடும்பமும் வேதாகமமும்.
- பொது மேடை.
- 6-30க்கு திரைப்படக்காட்சி

பங்குகொள்ளுங்கள், பயன்பெறுங்கள்.

யாழ். மறைக்கல்வி நடுநிலையம்,
ஆயர் இல்லம்,
யாழ்ப்பாணம்.

---

### ஜெனறல் பிறுங்...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

மாக 1958ஆம் ஆண்டு ஸ்பானிய கைதிகளுக்கு அருளப்பட்ட பொது மன்னிப்புக்குப்பின் அன்று தினம் அளிக்கப்பட்டதே மாபெரும் பொது மன்னிப்பாகும்.

## தலையங்கம்

தகுதிவாய்ந்த அதிகாரியின் அனுமதிபெற்றபின்பே ஆசிரிய தலையங்கங்கள் பிரசுரஞ் செய்யவேண்டியிருப்பதாலும், அவ்வதிகாரியின் அங்கீகாரத்தை உரியநேரத்தில் பெறுவது கஷ்டமாயிருப்பதாலும் சிலவாரங்களுக்கு ஆசிரிய தலையங்கங்கள் வெளிவரமாட்டாது என்பதை வாசகநேயர்களுக்குத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

*சத்தியவேத பாதுகாவலன்*

# மரியாயின் சேனையின் பொன்விழா

"ஆயிரம் காதப் பிரயாணம் ஓர் அடி வைத்தே ஆரம்பிக்கப்படுகிறது" என்று ஒரு சீனப் பழமொழி உண்டு. சரியாக ஐம்பது ஆண்டுகளுக்குமுன் டப்ளின் மாநகரில் திரு பிராங் டவ் என்னும் வாலிபர் அத்தகைய அடியொன்றை எடுத்துவைத்து ஆயிரம் காதம் பரந்து செல்லும் ஒரு இயக்கத்தை அடியிட்டார். அன்று சிறியதொரு பொறியாக அவர் ஆரம்பித்த இயக்கம் இன்று பெரும் சுவாலையாகி, கத்தோலிக்க உலகின் தலைசிறந்த இல்லற அப்போஸ்தலத்துவ ஸ்தாபனமாக விளங்குகின்றதென்றால் அது இறைவனின் ஏவுதலால் ஏற்பட்டதென்பதில் ஐயமென்ன?

இன்றைய திருச்சபையின் வாழ்வில் தூய ஆவியானவரின் ஏவுதலால் இரு திருவருட்சுனைகள் ஊற்றெடுத்துப் பாய்கின்றன என்று கருதினால் சோய் னென்ஸ் கூறுகிறார். இவற்றுள் ஒன்று மாதா பக்தியெனும் சுனை. மற்றது அப்போஸ்தலத்துவமென்னும் ஊற்று. ஏறக்குறைய ஒரு நூற்றாண்டாகப் பெருக்கெடுத்த மாதாபக்தி காலக்கிரமத்தில் இந்த மற்றொரு ஊற்றுடன் இணைந்தது. தூய ஆவியானவரின் தூண்டுதலின் விளைவாக ஞானஸ்நானத்தில் அடங்கியிருக்கும் அப்போஸ்தலத்துவக் கடமைகளை மக்கள் உணர ஆரம்பித்தனர். இக்கடமை குருக்களுக்கும், சந்நியாசிகளுக்கும் மட்டுமல்ல, சகல விசுவாசிகளுக்கும் உண்டு என்ற உண்மையை உணர ஆரம்பித்தமையே பொதுநிலையினருக்குப் பொறுப்புணர்ச்சியை உண்டாக்கியது. மாதாவின் பக்தியையும் அப்போஸ்தலத்துவ ஆர்வத்தையும் ஒருங்கே கொண்டு எழுந்த பொது நிலையினரின் இயக்கம்தான மரியாயின்சேனை. அப்போஸ்தலத்துவம் என்பது குருக்கள் சந்நியாசிகளுக்கே என்று பெரும்பாலான மக்கள் கருதி வந்த காலத்தில் பொது நிலையினருக்கென்றே ஓர் இயக்கத்தைத் தொடங்கி வைத்த திரு. பிராங் டவ்வுக்கும், அதை நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்த்து வந்த தொண்டர்களுக்கும் இன்றைய கத்தோலிக்க உலகம் பெரிதும் கடமைப்பட்டுள்ளது. தமது சகோதரருக்குப் பணி புரிவதில் மரியாயின்சேனை கையிடாத வேலை இல்லை எனலாம். ஆன்மீகப் பணியே அதன் குறிக்கோளாக இருந்தபோதிலும் அநேக சந்தர்ப்பங்களில் சரீர சேவையே அதற்கு வழியாக இருக்கின்றது.

சேனை வீரர்களின் அப்போஸ்தலத்துவ ஆர்வத்திற்கு கடலும், மலையும், நாட்டினெல்லைகளும் தடையாக இருக்கவில்லை. பல்வேறு நாட்டு வழக்கங்கள் கலாச்சாரங்களையெல்லாம் தனது சட்டதிட்டங்களுக்குட்படுத்தி எங்கும் மாறா இயல்புடன் விளங்கி வருகின்றது இச்சேனை. மூன்று பாப்பரசர்களின் பாராட்டை மட்டுமல்ல, அது இயங்கிவரும் ஆயிரத்துக்கு அதிகமான மேற்றிராசனங்களில் அவ்விட ஆயர்களினதும் குருக்களினதும் பாராட்டையும் பெற்றிருக்கிறது. சேனை குருவின் வலக்கரம் என்று சொல்லுமளவிற்கு அதன் சேவை பங்குக்குருமாருக்கு உதவியிருக்கின்றது. சேனை ஒரு சிறந்த நோக்கம் கொண்ட இயக்கம் மட்டுமல்ல நடைமுறையில் அதன் பணிகள் உருப்படியானவை என்பதை அவர்கள் கண்டிருக்கின்றனர்.

சேனை இன்று மாபெரும் இயக்கமாக இருந்தபோதிலும் அது இன்னும் வளர்வதற்கு எவ்வளவோ இடமிருக்கின்றது. திருச்சபையிலும சமூகத்திலும் பொதுநிலையினர் ஆற்றவேண்டிய எத்தனையோ பணிகள் உண்டு. அப்பணிகளை மரியாயின் சேனைதான் நிறைவேற்ற முடியும். ஆகவே, மரியாயின் சேனை அங்கத்தவர்கள் பெருகவேண்டும். அவர்கள் ஆற்றும் பணிகளும் பெருகவேண்டும். இந்த ஐம்பதாவது ஆண்டுவிழா சேனைக்குப் புத்துயிரூட்டி இன்னும் அதிக ஊக்கத்துடன் அப்போஸ்தலத்துவ பணியில் ஈடுபடத் தூண்டுமென எதிர்பார்ப்போம்.

---

"ஒவ்வொரு குழந்தைக்கும் ஒழுக்கப் பண்புகளில் நல்ல பயிற்சி அளிக்கும் பணியில்தான் நாம் முக்கியமாய் விழிப்பாயிருத்தல் வேண்டும். அதன் உள்ளத்தில் அதன் செயல்களின் பொறுப்புணர்ச்சியை வளர்த்தல் வேண்டும். மக்களிடத்தும் நிகழ்ச்சிகளிடத்தும் அது செய்யும் தீர்மானம், அதனை வளர்க்க வழிவகைகள் இவைகளைத்தான் அவர்களிடம் உருவாக்கல் வேண்டும். படிப்படியாக இளஞ் சிறார்களைத் தங்களுடைய செயலின் பொறுப்பு ஏற்கப் பழக்கவேண்டும்.

12ஆம் பத்திநாதர்

# நம் மேற்றிராணியாரின் கடிதம்

ஆயர் இல்லம், யாழ்ப்பாணம்,
9-10-1971.

**கிறிஸ்துவில் அன்பார்ந்த குருப்பிரசாதிகளே, பிள்ளைகளே!**

அவல நிலையிலிருந்து சொல்லொணாக் கஸ்திகள் அனுபவித்துக் கொண்டிருக்கும் பாக்கிஸ்தான்தேச மக்களுக்காக ஒரு விசேஷ செப, உபவாச, தானதினத்தை அனுசரிக்கும்படி பரிசுத்தபிதா எல்லா விசுவாசிகளுக்கும் ஒரு வேண்டுகோளை அண்மையில் விடுத்துள்ளார். இவ்விசேஷதினம் யாழ்ப்பாண மேற்றிராசனத்தில் நிகழும் ஐப்பசி 24-ந் தேதி ஞாயிற்றுக்கிழமை அனுசரிக்கப்படும்.

நிகழும் ஐப்பசி 17-ந் தேதி ஞாயிற்றுக்கிழமை திருப்பலிகளில் இவ்விசேஷ தினமாகிய ஐப்பசி 24-ந் தேதி ஞாயிற்றுக்கிழமை அனுசரிப்பைப்பற்றி விசுவாசிகளுக்கு அறிவித்தல் கொடுக்கும்படி எமது குருப்பிரசாதிகளைத் தயவாக வேண்டுகின்றேன். விசேஷ தினத்தன்று செபிக்கவேண்டிய செபங்கள், நடைபெறும் தேவாராதனைகள், விசேஷ பணம் திரட்டுதல் ஆகியவற்றையிட்டு எமது குருப்பிரசாதிகள் தங்கள் வசதியின்படி ஒழுங்குகள் செய்வார்களாக. அன்று தினம் பாக்கிஸ்தான் அகதிகளுக்காகச் சேர்க்கப்படும் பணத்தைக் குருப்பிரசாதிகள் ஐப்பசி முடிவுக்குமுன் நம் மேற்றிராசனத்தில் பிரதம நிதிப்பொறுப்பாள குருவருக்கு அனுப்பிவைக்கும்படி தயவாகக் கேட்டுக்கொள்ளப் படுகிறார்கள்.

பரிசுத்த தந்தையின் உருக்கமான வேண்டுகோளுக்கு நாம் எல்லோரும் உதாரகுணத்துடன் செவிசாய்ப்போமாக.

தேவன் உங்கள் எல்லோரையும் ஆசீர்வதிப்பாராக.

கிறீஸ்துவிலும், மரியன்னையிலும்
உங்கள் அன்புள்ள,
+ **ஜே. எமிலியானுஸ்பிள்ளை**, அ. ம. தி.,
யாழ். மேற்றிராணியார்.

பாப்பரசர் கோருகின்றார்

## கிழக்கு வங்காள தேச அகதிகளுக்கு எமது செப,தப, தானம்

கிழக்கு வங்காளதேச அகதிகள் 9,000,000 பேரின் அவலநிலையின் மேலிரங்கி உலக மக்கள் இரக்கங் காண்பித்து அவர்கள் அனுபவித்துவரும் பசி முதலிய துன்பங்களைத் தாமும் உணர்ந்துகொள்ளுகிறோம் என்று காட்டும்பான்மையில் ஒறுத்தல் முயற்சிகள் செய்து, அவர்களின்மேல் தேவன் இரக்கம் காண்பிக்க வேண்டுமென்று அவரைப் பிரார்த்தித்தும், தமக்குத் தேவன் கொடுத்திருக்கும் உலக பொருட்களில் சிலவற்றையேனும் அவர்களுக்கு ஈந்து அவர்களுடன் சகோதரத்துவ உணர்ச்சி பாராட்டவும், உலக மக்கள் யாவரையும் கத்தோலிக்கரையும் பிறரையும் பரிசுத்த தந்தை 6ஆவது சின்னப்ப பாப்பரசர் இரந்து கேட்டிருக்கிறார். இதற்கென செப தப தானதினமாக சென்ற ஞாயிறு தினத்தையும் குறிப்பிட்டிருந்தார். அஸ்ஸதினம் தாமும் உபவாசமிருந்து பிரார்த்தனையும் செய்தார். அவ்வமயம் அவரோடு 200 மேற்றிராணிமாரும் கலந்துகொண்டனர். இவ்வகதிகளுள் 8,00,000 பாலர்கள் உளர். விசேஷமாக இவர்களது நிலைமையே பாப்பரசரின் மனதை வாட்டுகின்றது.

**இலங்கை ஒ. ப. கூ. தா.**

ஐப்பசி
16, 17, 18-ந் தேதிகளில்
காலை 6-25 — 6-30 வரை

**கத். நற்சிந்தனை**

வழங்குபவர்:
சங், சகோ. S. டமியன்,
அ. ம. ப.

# மறைக்கல்வி ஆசிரியரைப் பாராட்டுகிறார் பாப்பரசர்

"மறைக்கல்வி ஆசிரியர்களின் சேவை மிகவும் அவசியமானது மாத்திரமல்ல அது ஒப்பற்ற சேவையாகவும் ஆறுதல் அளிப்பதாகவும், வத்திக்கான் சங்கம் திருச்சபைக்கு இட்டிருக்கும் பணியின் நிறைவாகவும் விளங்குகின்றது" எனப் பரி. தந்தை 6-வது சின்னப்ப பாப்பரசர் சென்ற மாத இறுதியில் ரோமாபுரியில் நடைபெற்று இடைக்காலமாக முடிந்த சர்வதேச மறைக்கல்வி சேவையாளர் மகாநாட்டு அங்கத்தவர்களுக்கு அளித்த பேட்டியில் கூறியிருக்கின்றார். இம்மகாநாட்டில் 14 கருதினல்மாரும் 50 மேற்றிராணிமார்களும் உட்பட சுமார் 1000 பேர் உலகின் பல பாகங்களிலிருந்துவந்து பங்குபெற்றுக் கொண்டனர். மகாநாட்டில் ஏகோபித்த முடிவு மறைக்கல்வி மாணவர்களுக்கு மாத்திரமல்ல வளர்ந்தவர்களுக்கும், பெற்றோருக்கும் அவசியமென்பதாம்.

## பாவித்த புடவைக் கூப்பன்

பாவித்த புடவைக் கூப்பன்களை மீண்டும் புடவைகள் வாங்குவதற்குச் சில வியாபாரிகள் பாவிப்பதாகக் கிடைத்த புகார்களைத் தொடர்ந்து, புடவைகள் வாங்குவதற்கென்று ஒப்படைக்கப்படும் கூப்பன்களில் இனிமேல் உடனடியாக ஓட்டைகள் துளைக்கப்படவிருக்கின்றன.

## பூசை வழிகாட்டி

### ஐப்பசி — 1971.

17. ஞாயிறு: ஆண்டின் 29-ம் ஞாயிறு [ப]
1-ம் வாசகம்: யாத். 17 : 8—13.
2-ம் வாசகம்: 2 திமோ. 3 : 14—4 : 2.
சுவிசேஷம்: லூக். 18 : 1—8.

18. திங்கள்: புனித லூக்காஸ் [சி]
வாசகம்: 2 திமோ. 4 : 9—17.
சுவிசேஷம்: லூக். 10 : 1—9.

19. செவ்வாய்: நாள் பூசை [ப]
வாச. உரோ. 5 : 12—15, 17—19, 20—21.
சுவிசேஷம்: லூக். 12 : 35—38.

20. புதன்: நாள் பூசை [ப]
வாசகம்: உரோ. 6 : 12—18.
சுவிசேஷம்: லூக். 12 : 39—48.

21. வியாழன்: நாள் பூசை [ப]
வாசகம்: உரோ 6 : 19—23.
சுவிசேஷம்: லூக். 12 : 49—53.

22. வெள்ளி: நாள் பூசை [ப]
வாசகம்: உரோ. 7 : 18—25.
சுவிசேஷம்: லூக். 12 : 54—59.

23. சனி: நாள் பூசை [ப]
வாசகம்: உரோ. 8 : 1—11.
சுவிசேஷம்: லூக். 13 : 1—9.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம், 5-ம் குறுக்குத்தெருவில் 20 ஆம் இலக்கத்தில் வதியும் திரு. நிக்கிலஸ் ஜேம்ஸ் அவர்களால் உரிமையாளருக்காக அர்ச். சூசைமாமுனிவர் அச்சகத்தில் 1971-ம் வருட ஐப்பசி மாதம் 16-ந்தேதி சனிக்கிழமை அச்சிடப்பெற்று வெளியிடப்பட்டது. தந்தி: "கதலிக்பிறஸ்." யாழ்ப்பாணம். தொலைபேசி: 300. தாபிதம்: 1876.